பொன்னேரியில் சிவில் கோர்ட்

***218** வினா.—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், பொன்னேரியில் சிவில் கோர்ட் எற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆம், எனில், அது எப்போது நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

கடலூர் வட்டத்திலுள்ள பஞ்சாயத்துக்கள்

* **219** வினா—**திரு. சி. கோவிந்தராசன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கடலூர் வட்டத்தில் நான்கு ஆண்டு காலமாக கணக்குகள் தணிக்கையே (Audit) செய்யப்படாமலிருக்கும் பஞ்சாயத்துக்கள் யாவை ?

(இ) தணிக்கை செய்யப்படாமைக்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) கடலூர் தாலுக்காவிலுள்ள எந்த பஞ்சாயத்தும் நான்கு ஆண்டுகளாக கணக்குகள் தணிக்கை செய்யப்படாமல் இருந்ததில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியைப் நான் போடும்போது, பல பஞ்சாயத்துகளில் நான்கு ஆண்டுகளுக்கு மேலாக ஆடிட் செய்யவில்லை. எனவே, 1967-ம் ஆண்டு இறுதியில் ஆடிட் செய்யப்பட்ட பஞ்சாயத்துக்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் தரப்படும்.

திரு. டி. மார்டின் : தலைவர் அவர்களே, பஞ்சாயத்தின் கணக்குகள் தணிக்கை செய்யப்படவில்லையென்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கணக்குகள் தணிக்கை செய்யப்படாமல் இருந்ததில்லை யென்றுதான் பதில் தரப்பட்டிருக்கிறது.

திரு. எ. கே. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, எல்லா பஞ்சாயத்துகளிலும் தணிக்கை செய்தாகிவிட்டது என்ற குறிப்பை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது, கடலூர் வட்டத்திலுள்ள பஞ்சாயத்துகளில் மட்டும் தணிக்கையாகி விட்டதா ? அல்லது எல்லா இடங்களிலும் உள்ள பஞ்சாயத்துகளில் தணிக்கையாகி விட்டதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கேள்வி கடலூர் வட்டத்தைப் பொறுத்தது.

திருப்பூரில் உள்ள மத்திய பஸ் நிலையம்

* **220** வினா—**திரு. கு. துரைசாமி :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருப்பூர் நகரில் தற்போது உள்ள நகராட்சி மத்திய பஸ் நிலையம் வேறு இடத்தில் அமைக்க கேட்டு நகராட்சி மன்றம் அரசிடம் விண்ணப்பித்துள்ளதா ?

1968 ஆகஸ்ட் 31]

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, திருப்பூரில் தற்போது இருக்கிற பஸ் நிலையம் போதுமான வசதியுள்ளதாக இல்லை. ஆகவே, அதை அருகாமையில் வேறொரு இடத்தில் மாற்றியமைக்க வேண்டுமென்று நகராட்சியிடமிருந்து கோரிக்கை ஏதேனும் அரசாங்கத்திற்கு வந்துள்ளதா ? அதன் மீது விரைவான நடவடிக்கைகள் எடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : திருப்பூர் நகராட்சியிடமிருந்து அப்படிப்பட்ட கோரிக்கை வருமானுல் அரசாங்கம் அதை பரிவுடன் பரிசீலிக்கும்.

வெள்ளிக் குறியிடாத வினக்கள்.

Cases of Corruption against Tahsildars

Q. 85—**Thiru A. M. RAJA : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—**

(*a*) **the number of Tahsildars who have been dealt with for corruption charges from 1962 to 1968, district-wise ; and**

(*b*) **the results thereof ?**

A.—(*a*) **Eight Tahsildars in Madurai district, six in Tiruchirappalli, four each in North Arcot, Chingleput and Ramanathapuram districts, three each in Coimbatore and Salem districts, two in Thanjavur and one each in South Arcot and Tirunelveli districts have been dealt with for charges of corruption during 1962-1968.**

(*b*) **As a result of the action taken, out of the 36 cases of Tahsildars, five have been dismissed from service, one has been removed from service, two have been compulsorily retired from service, one has been censured; charges have been dropped in respect of 8 Tahsildars and in respect of the remaining 19 cases disciplinary action is pending.**

விடை.—(அ) மதுரை மாவட்டத்தில் எட்டு தாசில்தார்கள், திருச்சிராப்பள்ளியில் ஆறு தாசில்தார்கள், வட ஆர்க்காடு, செங்கற்பட்டு, இராமநாதபுரம் மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் நான்கு தாசில்தார்கள், கோயம்புத்தூர், சேலம் மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் மூன்று தாசில்தார்கள், தஞ்சாவூர் மாவட்டத்தில் இரண்டு தாசில்தார்கள், தென் ஆர்க்காடு, திருநெல்வேலி மாவட்டங்களில் ஒவ்வொன்றிலும் ஒரு தாசில்தார் ஆகியோர் மீது லஞ்சக் குற்றங்கள் குறித்து 1962 முதல் 1968 வரை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

(இ) நடவடிக்கை மேற்கொண்டதன் விளைவாக, 36 தாசில்தார்களில் 5 பேர் பணியிலிருந்து தள்ளப்பட்டனர், ஒருவர் பணியிலிருந்து நீக்கப்பட்டார், இருவர் கட்டாயமாகப் பதவி ஓய்வு அளிக்கப்பட்டனர், ஒருவர் கண்டிக்கப்பட்டார். 8 தாசில்தார்கள் குறித்த குற்றச்சாட்டுகளைப் பொறுத்த வரையில், அவர்கள் மீதுள்ள குற்றச்சாட்டுகள் கைவிடப்பட்டன. எஞ்சியுள்ள 19 தாசில்தார்களைப் பொறுத்தவரை, ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது குறித்து விசாரணை நடந்து வருகிறது.

கைத்தறி நெசவாளர்களுக்கு நிவாரணம்

வினு 86—திரு. ஏ. அ. சுப்பராஜா : மாண்புமிகு கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவிற்கு விடையளிப்பாரா—

கைத்தறி நெசவாளர்களுக்கு நிவாரணம் அளிக்க அரசிடம் ஏதேனும் திட்டம் இருக்கிறதா ?